பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆனி 23 (6—7—72) வியாழன் வெளியூர்: ஆனி 24 (7—7—72) வெள்ளி [இதழ்: 19

கல்வி நிலையங்களுக்கு விடுமுறை

தமிழ்நாட்டில் பள்ளிகள் -- பாலிடெக்னிக்குகள் -- கல்லூரிகள் -- தொழில் ஆகியவை உட்பட எல்லாக் கல்வி நிலையங்களும் மாநில அரசின் கல்வித் துறையினர் அளித்த ஆலோசனையின்மீது இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும்.

சென்னை நகரிலுள்ள தனியார் பள்ளிகள் -- கல்லூரிகள் ஆகியவற்றையும் 6 7-ஆம் நாட்களில் மூடி வைக்குமாறு கல்வித் துறை யோசனை தெரிவித்துள்ளது.

'நல்லெண்ண அடிப்படையில் செய்த முயற்சி பலனளிக்கவில்லை'

சில உயிர்களைப் பலியிட்டதன் மூலம் அவர்கள் ஆசையைநிறைவேற்றிக்கொண்டனர்

தோல்வியின் விளைவாகத் தூண்டிவிடப்பட்ட வன்முறை துப்பாக்கிச்சூட்டில் முடியநேர்ந்தது

தன்னலநிலப்பிரபுக்களும் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டனர்

முதலமைச்சர் கலைஞர் வேதனை -- உயிரிழந்தோர் குடும்பங்கட்கு அனுதாபம்

சென்னை, ஜூலை 6 –

"சில அரசியல்வாதிகள், அர்த்தாலும்--அதனையொட்டி வன்முறைக் கிளர்ச்சிகளும் நடைபெற வேண்டுமென்றும் விரும்பினர்; அவர்கள் ஆசை நிறைவேறுவதற்குச் சில உயிர்கள் பலியாக்கப்பட்டுவிட்டதற்காக நான் உள்ளம் பதறுகிறேன; அந்த உயிர்களை இழந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துககொள்கிறேன்.

"எப்படியோ--மிகுந்த வருமானம் தரத்தக்க பணப் பயிர் சாகுபடி செய்யும் நிலச்சுவான்தார்கள், விவசாய வருமான வரிக்குத் தாங்கள் காட்டும் எதிர்ப்புக்காகவும்--தங்கள் தன்னலத்திற்காகவும் ஏழை விவசாயிகளுக்காகப் பரிந்து பேசுகின்றவர்களைப்போல் செயல்பட்டனர்; அந்தச் சந்தர்ப்பத்தை அரசியல் கட்சிகள் சில தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பயன்படுத்திக்கொண்டன.

"இந்த உண்மையைப் பொதுமக்களும்--வணிகப் பெருமக்களும்--தொழிலாளர்களும் உணர்ந்திருக்கின்ற காரணத்தால்தான், அர்த்தால் முயற்சி வெற்றி பெறவில்லை; ஆயினும் அவர்கள் எண்ணியவாறு வன்முறை சில இடங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்டுச சிலர் உயிரிழந்திருககின்றனர்.

"இந்த வருந்தத்தக்க சம்பவங்களுக்கு--இவைகளைத் தூண்டிவிட்ட நிலப்பிரபுக்களும் அவர்களுககுத் துணைநின்ற சில வன்முறை அரசியலவாதிகளும்தான் பொறுப்பேறக வேண்டும்.

"போக்குவரத்துக்களைக் கட்டை வண்டிகளைக் குறுக்கே நிறுத்தித் தடை செய்தல், பாங்கிகள்--போலீசு நிலையங்கள்--போலீசு வேன்கள்--பொதுமக்கள் பயணம் செய்த பஸ்கள் ஆகியவறறைச் சூழ்ந்துகொணடு தாக்குதல் போன்ற பலாத்காரச் சம்பவங்கள்தான், தவிர்க்க முடியாத அளவுக்குத் துப்பாககிச் சூட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டன என்பதையும், போலீசாரைத் தாக்குவதையே முக்கியக் கிளர்ச்சித் திட்டமாகப் போராட்டக்காரர்கள் வகுத்திருந்தார்கள் என்பதையும் பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்; அவ்வறிக்கையில் முதல்வர் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

"விவசாயிகள் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கைகளை மாநில அரசின் சார்பில் பரிசீலிக்க வேண்டியவைகளைப் பரிசீலித்து -- முன்னரே உறுதி கூறப்பட்டவாறு முடிந்த அளவு சலுகைகளை அளித்தும்கூட, 'எப்படியும் ஒரு வன்முறைக் கிளர்ச்சி நடத்த வேண்டும்' என்று திட்டமிட்ட அரசியல்வாதிகள் சிலர். 'நாடெங்கும் அர்த்தால்' என்று அறிவித்தனர்; அதற்குப் பொதுமக்கள் ஆதரவு இல்லை என்று உணர்ந்ததும், தங்கள் தோல்வியை மறைக்கத் திட்டமிட்ட வன்முறையில் இறங்கி, குறிப்பாகப் போலீசு அதிகாரிகளையும் -- போலீசுக்காரர்களையும் சூழ்ந்து வளைத்துக்கொண்டு தாக்கி -- அதன் காரணமாகத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று -- கலவரங்களில் ஈடுபட்டவர்கள் சிலர் உயிரிழந்தனர் என்றும், இராஜபாளையத்தில நடந்த கலவரத்தில இராமசாமி என்ற தலைமைக் கான்ஸ்டேபிள் ஒருவர் துப்பாக்கி வெடித்ததில மரணமடைந்தார் என்றும் விரும்பத்தகாத -- வேதனை தரத்தக்க செய்திகள் கிடைத்திருக்கின்றன.

இந்தத் துயரச் சம்பவங்கள் நடைபெருவண்ணம் தவிர்ப்பதற்கு அரசு எவ்வளவோ முயற்சிகளை எடுத்துக்கொண்டது; விவசாயப் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகப் பலமுறை அறிவிக்கப்பட்டது.

கடைசியாக, பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையாத் தேவர் எம்.பி. அவர்கள் என்னைச் சந்தித்தபோதும், விவசாய சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க நான் தயாராக இருப்பதாக அறிவித்தேன்; அவர் அந்தப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்குப் பலமுறை முயன்றும் அவர்கள் அவரைச் சந்திப்பதற்குத் தயாராக இல்லை.

சென்ற வாரம் மாநில விவசாயிகள் செயற்குழு உறுப்பினர்கள் சிறையிலிருந்தவர்களையெல்லாம் விடுதலை செய்தால் அவர்கள் கூடிப் பேசி ஒரு நல்ல முடிவு காணலாம் என்ற திரு. சின்னதுரையின் வேண்டுகோளை ஏற்று--அந்தச் செயற்குழு உறுப்பினர்களையெல்லாம அரசு விடுதலை செய்தது. அதை ஒரு நல்ல அறிகுறியாக எடுத்துக்கொண்டு, அந்தச் செயற்குழு உறுப்பினர்கள் முடிவுகள் மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது; அதற்கு மாறாக அவர்கள், அர்த்தால்; நடத்துவதற்கான திட்டங்கள் வகுத்துக் கிளர்ச்சியைத் தொடர்ந்தார்கள்.

கடைசியாக, அர்த்தாலுக்கு முதல் நாள் 4-ஆம் நாள் இரவு விவசாயப் பிரதிநிதிகளைச் சந்திக்க இரவு 8 30 மணிக்கு நேரம் குறிப்பிட்டு, கோட்டையில் சந்தித்துப் பேசலாம்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூலம் ஒப்புதல் அனுப்பினேன்; கடைசி நேரத்தில் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் செய்த முயற்சியும் பயனற்றுப் போயிற்று; விவசாயம் பிரதிநிதிகள் வரவில்லை."

பிரான்சுக்குப் புதிய தலைமையமைச்சர்

பாரிஸ், ஜூலை 6—

பிரான்சில் தலைமையமைச்சர் ஜாக்கஸ்சபான்-டெல்மாஸ் அமைச்சரவை பதவி விலகியது.

57 வயதான சபான் டெல்மாஸ், 1969 ஜூன் 20-ந் தேதியன்று தலைமையமைச்சர் பதவி ஏற்றார்.

பெய்ரே மெஸ்மர் புதிய தலைமையமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கழகச் செயலாளர் கடையில் கம்யூனிஸ்டு கைவரிசை

அண்ணா--கலைஞர் படங்களை உடைத்தனர்

தஞ்சை, ஜூலை 6—

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியை அடுத்த சங்கந்தி கிராமத்தில் வன்முறையாளர்கள், சாலையில் பள்ளம் வெட்டிப் போக்குவரத்துக்கு இடையூறு செய்தார்கள்.

அவர்கள்மீது போலீசார் தடியடியும் கண்ணீர் புகைக்குண்டு வீச்சும் நடத்தி நிலைமையை கட்டுப்படுத்தினர்.

மன்னார்குடி கீழப்பாலம் அருகே வலது கம்யூனிஸ்டுகள் ஏறத்தாழ 2,000 பேர் கூடி சாலையின் குறுக்கே வண்டிகளை நிறுத்தி வழிமறித்தார்கள்.

அருகில் இருந்த தி. மு. கழகச் செயலாளரின் கடையில் புகுந்து அண்ணா -- கலைஞர் படங்களை நொறுக்கிப் பொருள்களைச் சேதப்படுத்தினர்.

மேலும் கலவரம் ஏதும் ஏற்படாமல் இருக்கப் போலீசார் தலையிட்டுத் தடுத்தனர்.

கட்சி அலுவலகமா-- குண்டர்கள் கூடாரமா?

சிண்டிகேட் அலுவலகத்தில் 500 தடிக் கம்புகள் -- கற்கள்

கோவை மாவட்டம் கோபாலபுரத்திலுள்ள பழைய காங்கிரசு (சிண்டிகேட்) அலுவலகத்தில் போலீசார் செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் திடீரெனச் சோதனை நடத்தினர்.

அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 500 தடிக் கம்புகளைப் போலீசார் கைப்பற்றினர்; அன்றியும், அங்கு வைக்கப்பட்டிருந்த 500 உணவுப் பொட்டலங்களையும் கைப்பற்றினர்.

அலுவலகத்தின் ஒரு மூலையில் நிறையக் கற்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன; அவற்றையும் போலீசார் அப்புறப்படுத்தினர்.

இதனையொட்டி, அலுவலகத்திலிருந்த சிலர் கைது செய்யப்பட்டனர்; வேறு பலரைத் தேடிவருகின்றனர்.

கழக அரசைக் கவிழ்த்திடக் கனவு காணுதீர்

மாட்டுவண்டிகளில் வருபவர்கள் ஜெட் விமானத்துடன் மோத நினைக்கிருர்கள்

நன்றி மறந்த 'கனவான்'களை அடையாளம் கண்டுகொள்வீர்

நாஞ்சில் கி. மனேகரன் முழக்கம்

பதுக்கோட்டை, ஜூலை 6-

இங்கு நடைபெற்ற கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய நாஞ்சில் கி. மனேகரன் எம்.பி. அவர்கள் தமிழ் நாட்டு இந்திரா காங்கிரசு -- வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியினரின் துரோகச் செயல்களையும் நிலப்பிரபுக்களுக்குத் துணைபோகும் போக்கையும் சட்டிக்காட்டி எச்சரித்தார்; கழகத்தின் துணை கொண்டு நாடாளுமன்றத்துக்குச் சென்றவர்கள் அங்கு அமைச்சரானதும் என்னென்ன பேசுகிருர்கள் -- எப்படியெப்படி நடந்து கொள்கிருர்கள் என்பதையும் எடுத்து விளக்கினர்; அவர் பேச்சு வருமாறு:--

நிலத் திமிங்கலங்கட்டு துணைபோகின்றனர்

"விவசாயிகள் கிளர்ச்சி என்று நடத்திவருகிருர்கள்; மின்சாரக் கட்டணம் எதிர்ப்பு என்று கூறி இதைச் செய்கிருர்கள்; விவசாயிகள் எவரும் இதில் ஈடுபட்டு நடத்திவிடவில்லை.

நிலப் பிரபுக்களும் -- நிலத் திமிங்கலங்களும் இதனைத் துவக்கி, 'ஏழை விவசாயிகள் போராட்டம்' என்ற முலாம் பூசிவருகிருர்கள்!

'தமிழகத்தை ஒளிமயமாக்க வேண்டும்' என்று கலைஞர் அவர்கள் அனைவரையும் அழைக்கிருர்; இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரும்படி அவர் கூப்பிடுகிருர்; ஆனால் இந்த நிலப் பிரபுக்களோ – நிலத் திமிங்கலங்களோ இருட்டிற்கு ஏழை விவசாயிகளை இழுத்துச் செல்கின்றனர்.

ஏழை விவசாயிகளுக்கு உதவுவதாகக் கூறிக்கொள்ளும் வலதுசாரிக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள், நிலத் திமிங்கலங்களுக்குத் துணை போகிருர்கள்!

கம்யூனிஸ்டுக் கட்சி இந்திரா கட்சியின் கிளைபோல இயங்கி வருகிறது; இதன் தனித் தன்மைத் தடம் புரண்டுவிட்டது!

இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் இராமமூர்த்தி ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிருர்; 'விவசாயிகள் கிளர்ச்சியினை நிலப்பிரபுக்கள் நடத்துகிருர்கள்; இதில் எங்களுடைய கட்சி டங்கேற்காது; அரசியல் நோக்கத்தில் இந்தக் கிளர்ச்சி நடத்தப்படுகிறது' என்று குறிப்பிட்டிருக்கிருர்; இது வரவேற்கத்தக்கது.

நெருக்கடியிலும் பல திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்திவருகிறேம்

நாம் ஏழை மக்களுக்காகப் பல திட்டங்களைத் தீட்டிவருகிறேம்; ஆனால் போதிய அளவு நிதி இல்லை.

மின்சார வாரியம் தனது திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் திணறுகிறது; ரூ. 16 கோடி நிதி தேவைப்படுகிறது.

இவ்வளவு நெருக்கடி இருந்தும் தமிழக அரசு பல திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

வேடிக்கையல்ல - விசித்திரம்தான்

விவசாயிகளுக்கான மின் கட்டண உயர்வு ஒன்றேகால் காசுதான்; இதைத் தாங்கும் சக்தி ஏழை விவசாயிக்கு இருக்கிறது; ஆனால், மன்ருடியார் போன்ற நிலப் பிரபுக்களுக்கும் -- நிலத் திமிங்கலங்களுக்கும்தான் தாங்க முடியவில்லை.

மத்திய அரசிலுள்ள இந்திரா கட்சியினர் விவசாயிகளைப் பாதிக்கும் வரிகளைப் போட்டார்களே -- அப்போது ஏன் இவர்கள் மௌனம் சாதித்தார்கள்?

பம்பு செட்டுக்கு வரி போட்ட போது மௌனம் -- மண்ணெண்ணெய் வரியை உயர்த்திய போது மௌனம் -- உரத்திற்குக் கூடுதலான வரி விதித்தபோது மௌனம் சாதித்தனர்; ஆனால் தமிழக அரசு ஒன்றேகால் காசு உயர்த்தியபோதுதான் அவர்களால் தாங்கமுடியாமல் போய் விட்டது!

இப்படி ஒரு நெருக்கடியைக் காட்டித் தமிழகத்தில் குழப்பத்தை உண்டாக்க முடியுமா என்று பார்க்கிருர்கள்!

தமிழகத்திலிருந்து சென்ற இரண்டு பேர் டில்லி அமைச்சராக உள்ளனர்; இவர்களை நான், 'தர்ம சொத்தில் வளரும் பிள்ளைகள்' (சாரிட்டி பாய்ஸ்) என்று கூறுவேன்; இவர்கள் அடிக்கடித் தமிழகத்திற்கு வருகிருர்கள்.

தங்களை, ஏழைத் தொழிலாளர்களின் -- ஏழை விவசாயிகளின் தலைவர்கள் என்று மற்றவர்கள் கருதிக்கொள்ள வேண்டும் என்ற அளவில் இவர்கள் நடந்து கொள்கிருர்கள்.

சிம்சன் தொழிற்சாலையில் தகராறு ஏற்பட்டது; இதற்கு முன்பு பல தகராறுகள் காங்கிரசு ஆட்சியில் நடந்திருக்கின்றன; ஏன் -- காங்கிரசு ஆட்சி நடக்கும் மாநிலங்களில்கூடத் தொழில் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன; அவைகளைப் பற்றி உயர்த்திக் கூறும் சி. சுப்பிரமணியமும் -- மோகன்குமாரமங்கலமும், சிம்சன் விவகாரத்தில் தமிழக அரசைக் குறை கூறியிருக்கிறாகள்!

அவர்கள் நம்மால் டில்லிக்கு அனுப்பப்பட்டவர்கள்; நம் உதவியில்லாமல் இருந்திருந்தால் அவர்கள் டில்லிக்குச் சென்றிருக்க முடியாது; இதைப் பெருமைக்காக நான்கூறவில்லை; உண்மையை அடக்கத்துடன் எடுத்துச் சொல்ல வேண்டுமே என்பதற்காகத்தான் தெரிவிக்கிறேன்.

கிருஷ்ணகிரித் தொகுதியில் சி. சுப்பிரமணியம் போட்டியிட்ட போது, 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு இல்லையேல் என்னல் வெற்றிபெற முடியாது' என்று கூறினர்; 'கலைஞர் கருணாநிதி அவர்கள் தி. மு. கழகத் தொண்டர்களுக்கு மட்டும் தலைவரன்று; எனக்கும் அவர் தலைவர்தான்' என்ருர்; இந்த அளவுக்குப் பேசிய அவரைத் தற்போது அடையாளம் காட்ட வேண்டும் என்பதற்காக ஒன்றைக் கூறவேண்டியிருக்கிறது; கலைஞர் அவர்களிடம் நான் அப்போதே கூறினேன்; 'பாம்புக்குப் பால் வார்த்து வளர்ப்பதுபோல இருக்கிறது' என்று!

மாநிலங்களவைத் தேர்தலின் போது நடந்ததை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்; 'நான் வெற்றி பெறுவேன் -- டில்லி செல்லுவேன்' என்று கூறிப் புறப்பட்ட ஒரே ஆள் நான்தான்; ஆனல் சுப்பிரமணியமும் அவ்வாறு கூறினர்.

அப்போது காங்கிரசுத் தலைவராக இருந்த ஜெகஜீவன்ராம், 'எப்படி வெற்றி பெறுவீர்கள்' என்று கேட்டார்; 'எப்படியாவது வெற்றி பெறுவேன்' என்று பதிலளித்தார் சுப்பிரமணியம்.

காலையில் ரூ. 10,000 தந்தால் வேறு ஒரு கட்சிக்கும், பகல் உணவுக்குப் பிறகு 15,000 கொடுத்தால் மற்ருெரு கட்சிக்கும், தேநீர் நேரத்தில் ரூ. 20,000 தந்தால் பிறிதொரு கட்சிக்கும், படுத்துறங்கச் செல்லும்போது ரூ. 25,000 தரப்பட்டு பேரம் நடந்தால் மற்ருெரு கட்சிக்கும், இரவு உறங்கிய பிறகு தட்டியெழுப்பி, 'ரூ. 30,000 தருகிறேன்' என்ருல் வேறு ஒரு கட்சிக்கும் மாறுவதாக வாக்களித்துவிட்டு, காலையில் எழுந்ததும் முற்றிலும் மாருக மற்ருெரு புதிய கட்சியில் இருக்கும் கட்சி மாறிகளை நம்பித்தான் அப்படிக் கூறினர் சி. சுப்பிரமணியம்.

'இந்திரா கட்சி இவ்வாறு வடக்கே கட்சிகளை உருவாக்கியிருக்கலாம்; ஆனல், அதைத் தமிழ்நாட்டில் புகுத்தாதீர்கள்' என்று அன்றே நான் எச்சரித்தேன்; தி.மு.கழக எம்.எல்.ஏ.-க்கள் கொதித்தெழுந்தனர் -- சி. சுப்பிரமணியம் தோற்றுப் போனர்.

சுப்ரமணியத்தைப்பற்றிக் கலைஞரிடத்தில் எச்சரித்தேன் --- 'இவர் அபாயமானவர்; காட்டிக் கொடுப்பார் என்றேன்.

இத்தகைய நிலையிலிருந்த இந்த இருவர்தான் சிம்சன் தொழிலாளர்களிடம் வந்து, 'சனநாயகத்தை நம்பியிருப்பதில் பயனில்லை; நீங்கள் தி. மு. கழகத்திற்கு எதிராக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவைகளைச் செய்யுங்கள்' என்கின்ற முறையில் தூண்டிவிட்டார்கள்.

5 ஆண்டுகள்கூட தி. மு. கழக அரசு ஆளக்கூடாது என்று அவர்கள் நினைக்கிருகள்.

பட்டுப்போன -- துளிர்க்கக்கூட முடியாத நிலையில் உள்ள அவர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்வேன் -- 'நீங்கள் மாட்டு வண்டியிலே வருகிறீர்கள் -- நாங்கள் ஜெட் விமானத்தில் செல்லுகிருேம்' என்று!

விவசாயிகளுக்காகப் போராட்டம் நடத்துவதாகக் கூறும் நிலப்பிரபுக்களுக்கும் -- நிலத் திமிங்கலங்களுக்கும் ஒன்றைக் கூறிக்கொள்வேன் -- '15 ஏக்கர் நில உச்சவரம்பு 7 ஸ்டாண்டர்டு ஏக்கராகக்கூடக் குறைக்கப்படலாம்' என்று!

நிலத்திமிங்கலங்களும் -- வன்முறையாளர்களும் கழக அரசை மிரட்ட முயற்சிக்கின்றனர்; 'நம்முடைய மிரட்டலுக்குக் கழக அரசு அஞ்சிவிடும்' என்று கருதுகின்றனர்!

இவர்கள் எதிர்ப்பினை -- மிரட்டலைச் சமாளிக்கக் கழக அரசு தயாராக இருக்கிறது என்பதனை அவர்கள் உணரவேண்டும்."

கன்னடம்-- ஆட்சி மொழி

மைசூர் அரசு உத்தரவு

பெங்களூர், ஜூலை 5—

"மைசூர் மாநிலத்தில், அரசு அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படும் எல்லாக் கடிதங்களும் -- குறிப்புகளும் கன்னடத்திலேயே இருக்க வேண்டும்"

என்று மைசூர் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சங்கத் தலைவர்

எஸ். அக்கினிராஜ் தேர்வு

சென்னை, ஜூலை 6—

இந்த ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சங்கத் தலைவராக திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எஸ். அக்கினிராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழ்நாடு ஊராட்சிகளின் சங்கப் பொதுப் பேரவைக் கூட்டம் இங்கு கூடியபோது நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

ஆழ்வார்திருநகரி ஒன்றியத் தலைவரான நெல்லை நெடுமாறன் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

24 உறுப்பினர்கள் கொண்ட புதிய நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பழைய தலைவர் எஸ். எஸ். ஸ்ரீராமுலு ரெட்டி, அக்கினிராஜிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

நாவலர் 53-வது பிறந்த நாள்

விழாக் குழுத் தலைவர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் டாக்டர் நாவலர் அவர்களுடைய 53-வது பிறந்த நாள் விழா, ஜூலை 11-ம் நாள் வருகிறது.

வழக்கம்போல் அவருடைய தொகுதித் தோழர்கள், தொகுதி யெங்கும் தங்களுடைய அன்பைக் காட்டுகின்ற வகையில் விழா எடுப்பார்கள்; என்ருலும் -- எந்தத் துறையில் அமைச்சராக நாவலர் அவர்கள் இருக்கிருர்களோ அந்தக் கல்வித் துறையில் -- படிக்க வசதியில்லாமல் இருக்கும் ஏழை அனதைக் குழந்தைகளுக்கு நோட்டும் புத்தகங்கள் -- எழுதுகோல்கள் -- கரும்பலகைகள் வழங்குவதென சென்னை மாநகரத் தோழர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட விழாக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

மேலும், நாவலர் அவர்களுடைய பெயரால் நிரந்தரமான அறக் கட்டளை ஒன்றை -- அவர் படித்த அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் -- நிறுவவும் யோசனை உள்ளது.

இரண்டிற்கும் ஆடம்பரமற்ற தன்மையில் -- அதே சமயம் பயன்படும் வகையில் நாவலர் அவர்களுடைய பெயர் நிலைக்க நகரப் பொதுமக்களும் -- கழகத் தோழர்களும் -- நாவலர்பால் பேரன்பு கொண்டவர்களும் -- நாவலர் அவர்களுக்குத் தங்கள் அன்பைக் காட்டும் வகையில் இயன்ற பொருளுதவியை அளிக்குமாறு வேண்டுகிருேம்.

நாவலர் அவர்களுக்குத் தங்கள் அன்பைக் காட்டும் வகையில் மாலை -- கைத்தறி ஆடைகள் அளிப்பதற்குப் பதிலாகப் பள்ளிச் சிறுர்களுக்குப் பயன்படும் முறையில் நிதி உதவியையோ அல்லது பொருள்களையோ அளிக்குமாறு கேட்டுக் கொள்கிருேம்.

இராம. அரங்கண்ணல்
விழாக் குழுத் தலைவர்

உணவுப்பொருள் ஏற்றுமதி இல்லை

கல்கத்தா, ஜூலை 5—

"இந்தியாவில் உணவுப் பொருள் விலைகள் ஒரு நிலை அடையும் வரையில் அவை ஏற்றுமதி செய்யப்படமாட்டா"

என்று மத்திய வேளாண்மைத் துறையமைச்சர் ஷிண்டே தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இப்போது இந்தியாவில் 90 இலட்சம் டன் உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருக்கின்றன; இதுவரை இந்த அளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருந்ததில்லை.

வங்காள தேசத்துக்கு 7.50 இலட்சம் டன் உணவுப் பொருள்களை வழங்குவதாக இந்திய அரசு ஒப்புக்கொண்டிருந்தது; அதை முழுமையாக அனுப்பிவைத்துவிட்டது.

மேற்கு வங்கத்தில் சணல் உற்பத்தி குறையாமல் இருப்பதற்காகக் கணிசமான நிலப் பரப்புக்குப் புதிததாக நீர்ப்பாசன வசதி செய்யப்படும்."

காவிரி நீர்ப் பிரச்னை

தகவல் திரட்டும் குழு சென்னைக்கு வருகிறது

சென்னை, ஜூலை 5—

நீர்ப் பிரச்னையில் தமிழ்நாடு -- மைசூர் -- கேரளம் ஆகிய மாநில அரசாங்கங்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு அடுத்த வாரம் சென்னைக்கு வரும்.

நீர்ப் பாசனத் தலைமை எஞ்சினியர் எஸ். பி. நமசிவாயம் இந்தத் தகவலைக் கூறினர்.

மே 28ந் தேதியன்று மேற்கண்ட மூன்று மாநில முதலமைச்சர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் ஒருமனதாகச் செய்து கொள்ளப்பட்ட முடிவின்படி, இக் குழு மத்திய அரசால் அமைக்கப்பட்டது; குழுவில் நான்கு உறுப்பினர்கள் இருக்கின்றனர்; 3 மாதங்களுக்குள் அவர்கள் தங்களுடைய அறிக்கையை அளிப்பர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க.

செயற்குழு--பொதுக்குழு

கூட்டங்கள்

திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு -- பொதுக் குழுக் கூட்டங்கள், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், ஜூலை 29, 30 சனி -- ஞாயிறு ஆகிய நாட்களில் கோவை நகரில் நடைபெறும்.

'அறிவகம்'
சென்னை-18
5-7-1972

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி.மு.க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பள்ளியில் இட நெருக்கடியைத் தவிர்க்க நாவலர் யோசனை

சென்னை மாநகராட்சி ஏற்று நடவடிக்கை மேற்கொண்டது

சென்னை, ஜூலை 6--

"எட்டாவது வகுப்புவரையில் கற்பிக்கப்படும் உயர் துவக்கப் பள்ளிப் படிப்புக்குப் பிறகு உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பில் சேருவதற்குப் பெரும் நெருக்கடி உள்ளது; குறிப்பாக, மாநகராட்சி உயர் துவக்கப் பள்ளியில் படித்தவர்க்கு இவ்வகையில் பெருத்த சங்கடம் ஏற்பட்டுவருகிறது.

"இந்த நெருக்கடியைப் போக்கும்வகையில், ஒன்பது -- பத்து -- பதினென்று ஆகிய மூன்று வகுப்புகளை மட்டும் கொண்ட உயர்நிலைப் பள்ளிகளையும் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது; மாநகராட்சி இதற்கான இட வசதி செய்து கொடுக்குமாயின், இந்த ஆண்டுமுதலே ஒரு பத்துப் பள்ளிகளையாவது துவக்கலாம்; இதற்கு அரசு எல்லா உதவிகளையும் அளிக்கும்; இதன்மூலம், ஏழை மாணவிகளின் சிரமங்கள் தீரும்"

என்று கல்வியமைச்சர் நாவலர் அவர்கள், சென்னை 76-வட்டத்தில் மாநகராட்சிப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டுவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அதே கூட்டத்தில் பேசிய மாநகராட்சிக் கல்விக் குழுத் தலைவர் இலட்சுமிபதி, நாவலர் யோசனையை வரவேற்றுப் பின்வருமாறு குறிப்பிட்டார்:--

"டாக்டர் நாவலரின் கருத்துப்படி, ஒன்பது -- பத்து -- பதினென்று ஆகிய மூன்று வகுப்புக்களை மட்டும் கொண்ட உயர்நிலைப் பள்ளிகள் தொடங்க சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது; இந்த ஆண்டே இம்மாதிரியான உயர்நிலைப் பள்ளிகள் ஆறு தொடங்கப்படும்."

இந்த விழா, மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமையிலும் -- திரு. கே. ஏ. கிருட்டினசாமி எம்.பி. முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநகராட்சி உறுப்பினர் க. பார்த்தசாரதி அனைவரையும் வரவேற்ருர்.

அடிக்கல் நாட்டி நாவலர் பேசுகையில் மேலும் கூறியதாவது:--

"சென்னை மாநகராட்சியினர் 349 துவக்கப் பள்ளிகளையும் -- 29 உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றனர்.

இந்தப் பள்ளிகள் மட்டும் இல்லாமல் இருக்குமானல், ஏழை -- எளியவர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி அற்றுப்போய்விட்டிருக்கும் என்பது உண்மையாகும்.

புகழ்பெற்ற — சிறப்புகள் பல பெற்ற தனியார் பள்ளிகளில், ஏழை -- எளிய மக்களுக்குப் பெரும்பாலும் இடமளிப்பதே கிடையாது.

இப்படிப்பட்ட நிலையில், மாநகராட்சிப் பள்ளிதான் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி வசதியைப் பரவலாக அளித்து ஈடேற்றி வருகின்றன; இத்துறையில் சென்னை மாநகராட்சி ஆற்றிவரும் அரும்பணி மகத்தானதாகும்.

எத்தனையோ கிராமங்களுக்கு இடையிலும் மாநகராட்சிப் பள்ளிகள் மிகவும் திறம்பட இயங்கி வருகின்றன; தனியார் பள்ளிகளைப் போலவே -- ஏன் -- அவைகளையும் மிஞ்சும்வகையில் மாநகராட்சிப் பள்ளிகளையும் அரசினர் பள்ளிகளையும் இயங்கச் செய்ய முடியும்.

இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் பொறுப்புடன் -- மேலும் அதிக அக்கறை செலுத்தி, தனியார் பள்ளிகளையும் மிஞ்சும் விதத்தில் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும்; இதனை ஓர் அறைகூவலாக ஏற்றுச் செயல்படுமாறு வேண்டுகிறேன்.

மாநகராட்சிப் பள்ளிகளில் மட்டுமல்லாது ஏனைய கல்வி நிலையங்களிலும் 'ஷிப்டு' முறையினை செயல்படுத்துவதால், ஏற்கனவே உள்ள கட்டட வசதிகளின் மூலம் இரட்டிப்பு மாணவர் படிக்க முடியும்; இட நெருக்கடியும் தீரும்.

மாநகராட்சியில் உள்ள 75 பள்ளிகளிலே ஏற்கனவே 'ஷிப்டு' முறையைச் செயல்படுத்தியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்; இதனை மேலும் அதிகரிக்க வேண்டுகிறேன்.

அதிகாலையிலேயே எழுந்து நமது பணிகளையும் -- கல்விக் கூடங்களையும் தொடங்குவது நல்ல பலன் தரும்.

காலையில் உள்ள சுறுசுறுப்பும் -- சிறந்த சக்தியும், பொருள்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றலையும் -- நமது வேலைகளை சிறப்பாகச் செய்திடவும் உதவும்.

எனவே, காலையிலேயே கல்வி கற்கவும் -- பணியாற்றிடவும் அனைவரும் முனைய வேண்டுகிறேன்."

வறுமையும் வேலையின்மையும்

ஐ. நா. செயலாளர் கவலை

ஜெனீவா ஜூலை 5

"பல நாடுகளில் வறுமையும் -- பெரும்அளவில் வேலையின்மையும் பரவலாக இருப்பதால் உலக முன்னேற்ற நிலைமை கவலையளிப்பதாக இருக்கிறது.

"வறுமை -- உடல் நலமின்மை -- வேலையின்மை -- கல்வியின்மை ஆகிய பிரச்சினைகளை நேருக்குநேர் சந்தித்துத் தீர்க்க வேண்டும்"

என்று ஐ. நா. செயலாளர் வால்ட்ஹைம், பொருளாதார -- சமூகக் கழகக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

நகரங்களுக்கு மக்கள் வந்து குவிவதைத் தடுக்க கிராம வாழ்க்கையை வளப்படுத்த வேண்டுமென்றும், அக்கண்ணேட்டத்தில் வளர்ச்சிப் பணிகளைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் கூறினர்.

'அரசைப் பணிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்'

விவசாயிகள் பிரச்சினைக்காக அல்ல -- அவர்கள் போராட்டம்

பார்வர்டு பிளாக் தலைவர் மூக்கையாதேவர் அறிக்கை

சென்னை, ஜூலை 5—

அ.இ. பார்வர்டு பிளாக் தலையர் திரு. மூக்கையா தேவர் எம்.பி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், விவசாயப் போராட்டக்காரர்களின் அரசியல் உள்நோக்கத்தை வெளிப்படுத்தியிருப்பதுடன், 'விவசாயிகள் போராட்டம்' என்ற பெயரால் நடக்கும் கூததுக்கு ஆதரவு தரவேண்டாம் என்றும் அனைவரையும் வேண்டிக்கொண்டுள்ளார்; அவர் அறிக்கை வருமாறு:—

"அனைத்திந்திய பார்வர்டு பிளாக் மத்தியக் குழுவின் தீர்மானப்படி, தமிழ்நாடு பார்வர்டு பிளாக் குழு பி. கே. மூக்கையா தேவர் எம்.பி. அவர்கள் தலைமையில், முழு முயற்சி எடுத்து முதலமைச்சரையும் -- போராட்டக் குழுப் பிரதிநிதிகளையும் பார்த்தோம்.

பார்த்ததில், போராட்டக் குழுப் பிரதிநிதிகள், இதனை விவசாயிகளின் பிரச்சினையாகக் கருதாமல் கௌரவப் பிரச்சினையாக -- கௌரவ அரசியல் பிரச்சினையாகக் கருதிப் போராட்ட நிலைக்குக் கொண்டுவந்திருப்பதைக் கண்டு வருந்தினேம்.

விவசாயிகளின் உடனடிப் பிரச்சினையான விவசாயிகள் வாங்கும் பொருளின் விலை உயர்வு -- அவர்கள் விற்கும் பொருட்களின் விலை வீழ்ச்சி (மிளகாய், மிளகாய் வத்தல், பருத்தி)--மின் கட்டணம் -- வரி -- கடன் வசூல் இவைகள் அனைவருக்கும் தெரிந்ததே.

இவற்றை முதலமைச்சர் முழு மூச்சுடன் விவசாயிகளிடமும் -- அவர்களின் பிரதிநிதிகளிடமும் பேசித் தீர்த்துவைக்கவும், சம்பந்தப்பட்டவர்களை காணவும் தயாராக இருப்பதை எங்களால் நேரடியாக அறிய முடிந்தது.

ஆனல், போராட்டக் குழுவினர், பேசித் தீர்த்துக்கொள்வதற்குப் பதிவாக அரசைப் பணிய வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பணியில் ஈடுபட்டுள்ள அரசியல் கட்சிகளுக்கு விவசாயிகள் இரையாகாமல் இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிருேம்.

விவசாயிகளின் பிரச்சினையை, விவசாயப் பிரச்சினையாக அகில இந்திய பார்வர்டு பிளாக் முன்னின்று தீர்த்துவைக்க எப்போதும் தயாராக இருக்கிறது."

மதுரை மாவட்ட தி.மு.க. மாநாட்டு அலுவலக முகவரி

ஆகஸ்டு 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு அலுவலகம் கீழ்க்காணும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ளது:--

மதுரை மாவட்ட தி. மு. க.
மாநாட்டு அலுவலகம்
1-ம் பகுதி மங்கம்மாள் சத்திரம்,
மதுரை-1.

தொலைபேசி எண்:
31301

ஊராட்சி ஒன்றியங்களில் இரு மருத்துவமனைகள்

தமிழக அரசின் முயற்சி --- அமைச்சர் க. அன்பழகன் தகவல்

சென்னை, ஜூலை 5—

பொது நல மருத்துவ நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பொது நல மருத்துவ சங்கத்தை ஆளுநர் கே. கே. ஷா துவக்கிவைத்தார்.

பொது நல மருத்துவ நிறுவனங்கள் -- அரசுத் துறை மருத்துவ நிறுவனங்கள் இடையே அதிக அளவு ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக உள்ள இச்சங்கத்தின் திட்டத்தை ஆளுநர் பாராட்டினர்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தது இரு வைத்திய நிலையங்களாவது அமைக்கப்பட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது என்றும், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசிடம் உதவி கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றப் பொதுநல மருத்துவ நிறுவனங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சங்கத் தலைவர் டாக்டர் ஜாகப் செரியன் பேசுகையில், தமிழ்நாட்டில் 115 பெரிய பொதுநல மருத்துவமனைகள் உள்ளன என்றும், இவற்றில் 60 மருத்துவமனைகள் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ளன என்றும் தெரிவித்தார்.

தலைமைக் கழக அறிக்கை

கழக அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

தலைமைக் கழகத்தின் வேண்டுகோளுக்கேற்பவும், 'விவசாயிகள் சங்கம்' என்ற பெயரால் கழகத்துக்கும் -- கழக ஆட்சிக்கும் எதிர்ப்பாகக் கிளர்ச்சி நடத்தும் நிலப் பிரபுக்களின் அரசியல் உள்நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையிலும் இந்தத் திங்கள் 2 3 (ஞாயிறு, திங்கள்) ஆகிய நாட்களில் நாடெங்கும் நடைபெற்ற கொள்கை விளக்கக் கூட்டங்கள் குறித்த முழு விவரத்தையும் -- அதாவது, கூட்டம் நடைபெற்ற ஊர் -- கலந்து கொண்ட சொற்பொழிவாளர்களின் பெயர்கள் -- பேசப்பட்ட பேச்சுக்களின் சுருக்கம் ஆகியவற்றை 10—7—72-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குத் தவருது அனுப்பிவைக்குமாறு நாடெங்கும் உள்ள கிளை -- வட்ட -- மாவட்டக் கழக அமைப்புக்களின் நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

என். வி. நடராசன்
துணைப் பொதுச்செயலாளர்

'குற்றம் செய்தவர்களை விட்டுவிட மாட்டோம்'

முஜிபுர் ரகிமான் அறிவிப்பு

கொமில்லா, ஜூலை 5—

"பாகிஸ்தான் போர்க் கைதிகளை, வங்க தேசத்திலேயே விசாரிக்க வேண்டும்"

என்று, வங்க தேசத் தலைமை அமைச்சர் முஜிபுர் ரகிமான் மீண்டும் வற்புறுத்தினர்; இத்தொடர்பில் அவர் கூறியதாவது:—

"நான் உயிருடன் இருந்தால், அவர்களை வங்க தேசத்தில் வைத்துத்தான் விசாரிப்பேன்; குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும்.

"போர்க் கைதிகளை விசாரிக்காமல் விட்டுவிடும்படி பாகிஸ்தான் அதியர் பூட்டோ விடுத்துள்ள கோரிக்கைக்கு இணங்க முடியாது."

அனைத்திந்தியச் சிறப்பு விருதுபெற்ற

புரட்சி நடிகருக்குப் பாராட்டு விழா

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்

7--7--72 வெள்ளி மாலை 6 மணிக்கு
சென்னைக் கடற்கரை சீரணி அரங்கில்

தலைவர்:
முதலமைச்சர் கலைஞர்

பாராட்டுரை வழங்குவோர்:
கல்வியமைச்சர் நாவலர்
அமைச்சர் பெருமக்கள்
சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்
திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.
இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் எம்.பி.
அனைத்துக் கட்சித் தலைவர்கள், தென்னிந்திய – வடஇந்திய நடிக, நடிகையர் – திரைப்படக் கலைஞர்கள், மற்றும் பலர்.

நன்றியுரை:
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

மாலை 5.30 மணிக்கு மெல்லிசை நிகழ்ச்சி -- விழா முடிவில் இரவு 10-மணிக்கு புரட்சிநடிகர் நடித்த பல்வேறு படங்களில் சிறந்த காட்சிகள் சீரணி அரங்கில் திரையிடப்படும்.

ஆந்திரத்தில் நில உச்சவரம்பு

10 ஏக்கர் நன்செய் அல்லது 25 ஏக்கர் புன்செய் நிலத்திற்கு மேல் விவசாய நிலம் வைத்திருப்பவர்கள் நிலத்தை விற்பனை அல்லது கை மாறுதல் செய்வதையும், நகரத்தில் ஒரு சதுர கிலோ மீட்டருக்குமேல் காலி நிலம் வைத்திருப்பவர்கள் அதை விற்பனை அல்லது கை மாறுதல் செய்வதையும் தடை செய்யும் சட்டம் இரு மசோதாக்கள் ஆந்திரச் சட்டமன்றத்தில் நிறைவேறின.

காணவில்லை

சென்னை, ஜூலை 6—

பரமேசுவரி என்னும் 4 வயதும் பெண் கடந்த திங்கட்கிழமை முதல் காணவில்லை; கருப்பு நிறம் பச்சை கவுன் அணிந்திருந்தது.

இக்குழந்தையைக் கண்ணுற்றவர்கள் அன்புகூர்ந்து கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்:—

கங்காதரன், போலீசு கான்ஸ்டபிள், 58, போலீஸ் லைன், கொண்டித்தோப்பு, சென்னை-1.

அமைதிக்கு ஊறு விளைவிக்கத் திட்டமிட்ட முயற்சி

அரிவாள்-வேல் கம்பு-பயங்கர ஆயுதங்களுடன் ஊர்வலம்

அமைதி காத்திட்ட காவல் துறையினரும் தாக்கப்பட்டனர்

தவிர்க்க முடியாத நிலைமையில் துப்பாக்கிச் சூடு--போலீசு ஐ.ஜி. அறிக்கை

சென்னை, ஜூலை 6—

நேற்று, 'கடையடைப்பு -- அர்த்தால்' என்றபெயரில் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் கிளர்ச்சிக்காரர்கள் -- குறிப்பாக வலது கம்யூனிஸ்டுகள் திட்டமிட்ட வன்செயல்களில் ஈடுபடலாயினர்; பயங்கர ஆயுதங்களை ஏந்தியும் -- கற்களை வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர்; பொது உடைமைகளுக்குச் சேதம் உண்டாக்கினர்; பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறுகள் விளைவித்தனர்.

தற்காப்புக்காகவும், பொதுவுடைமைகளுக்குச் சேதம் ஏற்படாமல் தடுக்கவும், பொது அமைதி -- ஒழுங்கை நிலைநாட்டவும் போலீசார் சில இடங்களில் கண்ணீர்ப் புகை வீச்சு நடத்தியும் பலன் அளிக்காமல் போகவே துப்பாக்கியால் சுட நேர்ந்திருக்கிறது; இதன் விளைவாக ஆங்காங்கு சிலர் உயிரிழக்கவும் -- காயமடையவும் நேர்ந்துள்ளது.

அமைதிக்கு ஊறு விளைவிக்க வேண்டுமென்றே திட்டமிட்டுக் காலித்தனங்களிலும், தாக்குதல் -- சூறையாடுதல் ஆகியவற்றிலும் ஈடுபட்டதன் விளைவே இந்த விரும்பத்தகாத -- வேதனைமிகு நிகழ்ச்சிகள்.

நிலைமைகளை விளக்கித் தமிழ்நாடு போலீசுத் தலைமை அதிகாரி (ஐ.ஜி.) விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

விவசாயிகள் போராட்டத்தையொட்டி அமைக்கப்பட்ட மாநிலப் போராட்டக் குழுவின் கூட்டம், மதுரையில் ஜூன் 28-ந் தேதி நடைபெற்றது. இதில் ஜூலை 4-ந்தேதி நள்ளிரவு முதல், 5-ந் தேதி நள்ளிரவு வரை மாநிலம் முழுவதும் அர்த்தால் ('பந்த்') நடத்துவது என்று முடிவு செய்தனர்.

பஸ் -- இரயில் போக்குவரத்துகளைத் தடுப்பது என்றும், போராட்டத்தில் கலந்துகொள்ளும்படி மாநில -- மத்திய அரசு ஊழியர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது என்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

வழக்கமான பொதுவாழ்வு பாதிக்கப்படக் கூடாது என்ற நோக்கத்திற்காக ஏராளமான போலீசுப் பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்தது.

போக்குவரத்துக்கள் சீராக நடைபெற வேண்டும் என்பதற்காக 'நடமாடும் போலீசுப் படை'யும் அமைக்கப்பட்டது.

பயங்கர ஆயுதங்களுடன் ஊர்வலம் வந்தனர்

புதன்கிழமை மாலை 6-மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம் சின்னகண்ணனூர், கீழ்பசலை கிராமங்களிலிருந்து ஏறத்தாழ 400 பேர் அரிவாள் -- வேல கம்பு -- நீளமான கம்புகள் ஆகிய பயங்கர ஆயுதங்களுடன் அனுமதியில்லாமல் மானாமதுரைக்கு ஊர்வலமாகச் சென்றனா.

அவர்கள், சில கடைகளைத் தாக்கினார்கள்; பஸ் நிலையத்திலிருந்து வெளியேறும் பஸ்களைத் தடுத்தார்கள்; அரிவாள் -- வேல் கம்புகளைக் காட்டி சாலைகளில் இருந்த மக்களைப் பயமுறுத்தினார்கள்.

மக்கள் உயிருக்கும் -- பொருள்களுக்கும் சேதம் -- இழப்பு ஏற்படாமல் தடுப்பதற்காகப் போலீசார் தலையிட வேண்டியதாயிற்று.

போலீசார்மீது தாக்குதல்

உடனே அந்தக் கும்பல், போலீசார்மீது கற்களை வீசியும், பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்தியும் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியது; இதில், ஒரு இன்ஸ்பெக்டர் -- ஒரு தலைமைப் போலீசுக்காரர் -- 5 போலீசுக்காரர்கள் ஆகியோர் காயமடைந்தனர்; அவர்களில், தலைமைப் போலீசுக்காரருக்கும்-ஒரு போலீசுக்காரருக்கும் படுகாயம் ஏற்பட்டது.

தடியடி நடத்தப்பட்டது -- பயன் ஏற்படவில்லை; எனவே தற்காப்புக்காகப் போலீசார் துப்பாக்கியால் சுட நேரிட்டது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ருஞ்சு என்ற கருப்பையா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது இறந்தார்; மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

போலீசாரைச் சுற்றி வளைத்துத் தாக்கினர்

சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்திற்கு அருகில் சேலம்—ஆத்தூர் சாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மாட்டு வண்டிகளையும் -- கற்களையும் அகற்றுவதற்காகப் போலீசார் சென்றனர்.

அப்போது, 4,000-த்துக்கு மேற்பட்ட கிளர்ச்சியாளர்களின் கூட்டம் ஒன்று போலீசாரைச் சுற்றி வளைத்துத் தாக்கத் தொடங்கியது; ஒரு போலீசு இன்ஸ்பெக்டரை வன்முறைக் கூட்டத்தினர் பிடித்துத் தள்ளி -- சாலையில் இழுத்துச் சென்றனர்; போலீசார்மீது கற்களையும் வீசத் தொடங்கினர்; இந்தக் கல்வீச்சில், உதவி போலீச சூப்பிரண்டெண்டு ஒருவர் படுகாயம் அடைந்தார்.

இதனால், போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டது; இதில் 23 பேர் காயமடைந்தனர்.

இங்கு 7 பிணங்கள் கிடப்பதாகப் போலீசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது; ஆனால், பிணங்கள் போலீசாரிடம் ஒப்படைக்கப்படவில்லை; பிணங்கள் கிடைத்து -- அவை பரிசோதிக்கப்பட்ட பிறகுதான், 'எப்படி இறந்தார்கள்' என்பதை நிச்சயிக்க முடியும.

கோவில்பட்டியில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் மெயின் ரோடில் திறந்திருந்த கடைகளுக்குச் சென்று -- அதை மூடுமாறு வற்புறுத்தினார்கள்; அத்துடன் கடைக்காரர்களைத் துன்புறுத்தவும் தொடங்கினர்.

கடைக்காரர்களுக்கும் -- சொத்துக்களுக்கும் பாதுகாப்புக் கொடுப்பதற்காகப் போலீசார் தலையிட்டனர்; கூட்டத்தினர் போலீசாரைத் தாக்கவே, ஓர் உதவி சப்-இன்ஸ்பெக்டரும், 5 போலீசாரும், தாசில்தாரும் காயமடைந்தனர்; அதனால் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்; இதில் 16 பேர் காயமடைந்தனர்; அவர்களில் ஒருவர் இறந்தார்.

ஸ்டேட் பாங்கியைத் தாக்க முயற்சி

ஆயிரம் பேர் அடங்கிய கூட்டம் ஒன்று, இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூரில் உள்ள கடைகளுக்கு ஊர்வலமாகச் சென்று கடையை மூடுமாறு மிரட்டியது; அருகிலிருந்த 'ஸ்டேட் பாங்கி'க் கட்டடத்தையும் தாக்கத் தொடங்கியது.

இதனால் போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்; ஆனால் கூட்டத்தினர் போலீசாரைத் தாக்கத் தொடங்கினர்; அதை அடக்கப் போலீசார் சுட்டதில் ஒருவர் இறந்தார்; மற்றும் 3 பேர் காயமடைந்தனர்.

போலீசு அதிகாரிகள் மீது தாக்குதல்

கோவை மாவட்டத்தில் பல்லடம்—செட்டிபாளையம் சாலையில் உள்ள அய்யம்பாளையத்தில், சாலையில் வைக்கப்பட்டிருந்த தடைகளை அகற்றுவதற்காக ஒரு போலீசுப் படை சென்றது; அவர்களை இரண்டாயிரம் பேர் அடங்கிய கூட்டத்தினர் பயங்கர ஆயுதங்களுடன் சுற்றிவளைத்துத் தாக்கத் தொடங்கினர்; இதில் போலீசுத் துணை சூப்பிரண்டெண்டு ஒருவரும், ஓர் இன்ஸ்பெக்டரும், ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் மற்றும் 9 போலீசாரும் காயமடைந்தனர்; இதனால் துப்பாக்கிச் சூடு நடந்தது; 6 பேர் காயமடைந்தனர்.

இங்கு 2 பிணங்கள் கிடப்பதாகக் கூறப்பட்டது; ஆனால், பிணங்கள் போலீசாரிடம் ஒப்படைக்கப்படவில்லை.

கோவையை அடுத்த பெரிய நாயக்கன்பாளையத்தில் ரோந்து சுற்றிய போலீசுப் படையை வன்முறைக் கூட்டம் தாக்கியது; தற்காப்புக்காகப் போலீசார் சுட்டனர்; இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

கடைகள்--வீடுகளில் கொள்ளையடிக்க முயற்சி

விருதுநகரை அடுத்த ஆனைக்கரைமேடு என்ற ஊரில் போலீசார் தற்காப்புக்காக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் இறந்தார்.

விருதுநகர்—சாத்தூர் -- இராசபாளையம் ஆகிய இடங்களில் வீடுகளையும், கடைகளையும் வன்முறைக் கூட்டம் கொள்ளையடிக்க முற்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறன.

இராசபாளையத்தில் பல பஸ்கள் மீது கல்வீசப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டன.

இராசபாளையத்தில் வன்முறைக் கும்பலை அடக்கப் போலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.

இங்கு தற்செயலாகத் துப்பாக்கிக் குண்டு வெடித்ததன் காரணமாக, சி.ஐ.டி. தலைமைப் போலீசுக்காரர் இராமசாமி என்பவர் மரணமடைந்தார்.

சேலம் -- பெங்களூர் மீட்டர்கேஜ் இரயில் பாதையில், இரயிலை கவிழ்க்க ஆனைக்கல் -- ஒசூர் இரயில் நிலையங்களுக்கு இடையே இரும்புக் கம்பிகளையும் -- பாறைகளையும் கலகக்காரர்கள் வைத்திருந்தனர்; இதை சமயத்தில் கண்டுபிடித்து நீக்கியதால் விபத்து எதுவுமின்றி இரயில் தப்பிவிட்டது.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா நிகழ்ச்சிகள்

ஜூலை 7: திருநெல்வேலி — திரு. டி. கணபதி எம்.எல்.ஏ. ஏற்பாடு செய்துள்ள கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்:—முற்பகல் 11 30 மணி முதல பிற்பகல 1-மணி வரை: வள்ளியூர் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டு விழா; 3-80 மணி: பனகுடி ஊராட்சி வரவேற்பு; மாலை 4 30 மணி: விப்பிலாங்குளம தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி திறப்பு; 5-30 மணி: கெத்தரங்கபுரம் உயர்மட்டக் குடிநீர்த் தொட்டி திறப்பு; 5-30 மணி; தெற்கு கருங்குளம் ஊராட்சி ஒன்றியப் பள்ளித் திறப்பு; இரவு 7-30 மணி: பழவூர் உயர்மட்டக் குடிநீர்த் தொட்டி திறப்பு; 8 மணி: காவல்கிணறு பள்ளிக் கட்டடத் திறப்பு; 8 30 மணி: ஏர்வாடி பொதுமக்கள் வரவேற்பு.

தோல்வி கண்ட ஆத்திரத்தில் வன்முறை

இரு பாலங்கள் தகர்க்கப்பட்டன

கோவை, ஜூலை 6—

கோவையில், 'முழு அடைப்பு' தோல்வியடைந்ததைத் தொடர்ந்து – சுற்று வட்டாரங்களில் வன்முறைச் செயல்கள நிகழ்ந்தன.

கருமத்தம்பட்டி அருகே இரு பாலங்களும், கோயில்பாளையத்தில் ஒரு பாலமும் தகர்க்கப்பட்டன.

விஜயபுரத்தில் ஒரு பாலத்தைச் சிலர் கடப்பாரையால் இடித்தார்கள்.

இதுபற்றித் தகவல் கிடைத்துப் போலீசார் வந்ததும் கிளர்ச்சிக்காரர்கள் ஓடிவிட்டார்கள்.

கோவில்பாளையம், மங்கலம் ஆகிய இடங்களில் சாலையின் குறுக்கே மாட்டு வண்டிகளை நிறுத்தியிருந்தனர்; போலீசார் அவற்றை அகற்றிப் போக்குவரத்துக்கு வழிசெய்து கொடுத்தார்கள்.

கழகச் செயலாளர் தாக்கப்பட்டார்

கோவை மாவட்டம் காரமடையில் நேற்று கடைகள் வழக்கம்போல் திறந்திருந்தன.

விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த சிலர் கூட்டமாக வந்து கடைகளை மூடும்படி கூறிக் கடைக்காரர்களை மிரட்டினார்கள்.

அப்போது காரமடை நகர தி. மு கழகச் செயலாளர் அரங்கநாதன் தலைமையில் 3 பேர் அங்கு வந்து 'கடையை மூடும்படி, ஏன் கட்டாயப்படுத்துகிறீர்கள்' என்று கேட்டார்; உடனே அவர்கள், தி. மு. கழகச் செயலாளர் அரங்கநாதனையும் மற்றவர்களையும் கல்வீசித் தாக்கினார்கள்; இதனால் 4 பேர்களுக்குப் படுகாயம் ஏற்பட்டது.

துணிக் கடை சூறை

பிறகு கல்வீசிய அந்தக் கூட்டத்தினர், திறந்திருந்த துணிக கடைக்குள் புகுந்து சூறையாடினர்; கடையில் இருந்த துணிமணிகள் தெருவில அள்ளி வீசப்பட்டன; கடை ஊழியர்களும் தாக்கப்பட்டனர்.

இன்னொரு பகுதியில் இரண்டு அரசுப் பேருந்துகளை நிறுத்திக் கல் வீசினார்கள்; அதனால் கண்ணாடிகள் உடைந்தன.

பள்ளியில் புகுந்து குழப்பம் விளைவிக்க முயற்சி

கம்யூனிஸ்டுத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் -- என்று கருதப்படும் 50 பெண்கள், ஒரு பள்ளிக்கூடத்தில் புகுந்து வகுப்புக்களை நடத்தவிடாமல் கூச்சல் போட்டார்கள்; கதவு நிலை ஒன்றை இடித்து மாணவர்களை வெளியே இழுத்தார்கள்.

போலீசார் அங்கு வந்ததும் அவர்கள் கலைந்து போய்விட்டனர்.

திருவில்லிபுத்தூரில்

இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் நகரைச் சுற்றிலும் மாட்டு வண்டிகளை நிறுத்தினார்கள்.

சாலைப் பாலங்கள்மீது மரங்களை வெட்டிப் போட்டு பஸ் போக்குவரதலைத் தடுத்தார்கள்.

நான்கைந்து தெருக்களில், 'கடைகளை மூடு -- கடைகளை மூடாதே' என்று இரு தரப்பினர் மோதிக் கொண்டதில், 12 பேர் காயமடைந்தனர்.

2 ஓட்டல்கள்மீது கல்வீச்சு நடந்தது; கல்வீச்சினால் பல்புகள் நொறுங்கிச் சேதமடைந்தன.

விருதுநகரில் விளைவித்த இடையூறுகள்

விருதுநகரில் அரசாங்கப் பஸ் ஒன்றை வன்முறையாளர்கள் மறித்து -- காற்றைப் பிடுங்கி விட்டுவிட்டார்கள்.

திருவனந்தபுரம் மெயில் விருதுநகரைவிட்டுப் புறப்பட்டவுடன் இரயில்வே கேட் அருகே நிறுத்திவிட்டனர்; பிறகு போலீசார் வந்து கூட்டத்தை விரட்டி இரயிலை ஓடச் செய்தனர்; இதனால் 15 நிமிடம் தாமதமாகச் சென்றது.

விருதுநகரிலிருந்து சாத்தூர் போகும் சாலையில் மாட்டு வண்டிகளை நிறுத்தி -- சக்கரங்களைக் குறுக்கே போட்டுப் போக்குவரத்தைத் தடுத்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது